

## ஆண்டவர் உயிர்த்தார் மகிழ்ந்திடுவோம்

# தொண்டன்

ஆரம்பம் : பெப்ரவரி ~ 1969

ஏப்ரல் - 1999 - 12/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் பக்கம்

## வாழ்த்துக்கள்!

கடந்த மார்ச் மாதத் தொண்டனில் வெளிவந்த கே. கிறீஸ்டி முருகுப்பிள்ளையின் 'நிஜங்களின் தரிசனம்' என்னும் சிறுகதை என் மனதை மிகவும் கவர்ந்திருந்தது. ஆசிரியைகளின் நாளாந்த வாழக்கையின் யதார்த்தத்தை தெட்டத் தெளிவாக சுட்டிக் காட்டியிருந்தமை ஆசிரியைகளைப் புரிந்து கொள்ளாத பலரைச் சிந்திக்கத் தூண்டியிருக்கும். கிறிஸ்டி முருகுப்பிள்ளை அவர்களுக்கு எனது வாழ்த்துக்கள்.

செல்வி. நிமலினி அன்னதுரை

மட்டக்களப்பு

## நமது கடமை

இந்தியாவில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறைகள் பற்றி வந்த கட்டுரை அவசியமான ஒன்று. ஒருடலாய் ஒன்றுபட்ட திருச்சபையின் உறுப்பினர்களுக்கு எங்கு இன்னல் நேர்ந்தாலும் குரல் கொடுப்பதும் அது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் நமது பொறுப்புள்ள கடமையாகும்.

சசிகலா

மட்டக்களப்பு

## அன்றுபோல் என்றும்

இம்முறையும் வழமைபோல் மார்ச் மாதத் தொண்டன் ஏப்ரல் மாதந்தான் கையில் கிடைத்தது. எப்போதுதான் உரிய காலத்துக்குத் தரப்போகிறீர்கள்? 'ஆறின கஞ்சி பழங்கஞ்சி' அவ்வளவாக சுவைக்காது. தொண்டன் ஆவி பறக்கக் கிடைக்க வேண்டும் என்பதே எமது விருப்பம்.

யு. ஞானச்சந்திரன.

திருகோணமலை

## அதிர்ச்சி

நம்நாட்டு கிரிக்கெட் வீரர்களின் சம்பளத்தைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தேன். தொடருகின்ற போரினால் ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகளாகி உணவின்றி, இடமின்றி, மருந்தின்றி பஞ்சத்தால் வாடும் இந்த நாட்டில் கிரிக்கெட்ட வீரர்களுக்கு இவ்வளவு தொகை சம்பளம் வழங்கப்படுவது மகா அநியாயம்.

பிரதீபன் சகாயராஜ்

கொழும்பு

## பாராட்டு

மார்ச் மாதத் தொண்டனில் அருமையான இரண்டு கவிதைகளைத் தந்துள்ளீர்கள் கற்பாறையும் கலங்கியது என்ற கவிதை அருமையான கற்பனை. மரணத்தீர்ப்பு கவிதை மனமாற்றத்தைத் துண்டும் சொடுக்கிய சாட்டை கவிஞர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

மேரி மாக்கிறட்

மட்டக்களப்பு.

## மனிதநேயம் பேசிய 'மனிதம்'

நீண்ட காலமாக தொண்டனில் 'மனிதம்' தொடர்கதையை எழுதிவந்த நயார்த்திபன் அவர்களுக்கு பாராட்டையும் நன்றியையும் கூறிக் கொள்ளுகிறோம். 'மனித நேயம் இல்லாத மதம்' போலித்தனமானது. சுமையானது, அழிவைத் தருவது என்பதை தொடர்கதை அழுத்தமாகவே தெரிவித்தது. ஆனாலும் என்ன! உனது, எனது, என்று மோதுபவர்களுக்கு உறைக்க வேண்டுமே!

M. போல்ராஜன்

தெமட்டகொட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

ஏப்ரல் - 1999

மலர் 31 இதழ் 03

ஆசிரியர்:
A. தேவதாசன்

இணை ஆசிரியர்:
மலர்வேந்தன்

துணை ஆசிரியர்கள்:
S. A. இருதயநாதன்
மெற்றில்டா இராஜேந்திரம்


வெளியீடு:
சமூகத் தொடர்பு நிலையம்,
திரு/மட். மறை மாவட்டம்.

முகவரி:
சமூகத் தொடர்பு நிலையம்,
அ. பெ. எண் - 44,
மட்டக்களப்பு.

SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44,
BATTICALOA. 30000
Tel: 065-22723

விலை: 12/-

ஆண்டுச் சந்தா: 140/-
(தபாற்செலவு உட்பட)



உள்ளே.........


1. இதயந்திறந்து ... 02
2. மானுட உயிர்ப்பு ... 03
3. அன்பிற்குத் ... 04
4. மதத்திற்கும் ... 06
5. புனித நாட்டுப்பயணம் ... 08
6. உயிர்ப்பு ... 09
7. அமைதி என்பது ... 12
8. எமது உயிர்ப்பு ... 13
9. இஸ்ராயேலின் ... 14
10. புனிதர்களான ... 15
11. நம்புங்கள் நடக்கும் ... 16
12. கிறிஸ்தவ இலக்கியம் ... 17
13. திருச்சபைச் செய்திகள் ... 18
14. யேசுவிடம் சில ... 20
15. இயேசுவின் பதில் ... 21
16. விவிலிய - பொது அறிவு ... 23
17. போட்டி முடிவுகள் ... 24



ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயந் திறந்து............

உயிர்ப்பு உனக்கு உண்டு - என்ற
உண்மையை உனக்கு உரைக்க
உயிர்த்தெழுந்தார் உத்தமனார் இயேசு,
உண்மை இது என்றார் - இதை
உவமைகளால் உரைத்தார் - இதை
உயிர்த்தெழுந்து உறுதிப்படுத்தினார்.
உயிர்ப்பு உனக்கு உண்டு - இதை
உதாசீனப் படுத்தாதே.
முடிவில்லாத வாழ்வு, நிலைவாழ்வு
என்பன அவரது அழியாத வார்த்தைகள்.
அவைதான் உன் வாழ்வின் அடிகள்
அவரது வார்த்தைகளை அலட்சியம் செய்யாதே.
ஆவலுடன் அதை வாசி,
உணவையும், காற்றையும், உள்ளெடுப்பதுபோல
வாழ்வுதரும் வார்த்தைகளை
உனக்குள்ளே உள்ளெடு
உணவாலும், காற்றாலும் வாழ்வதுபோல
வார்த்தைகளால் வாழ்வை அமைத்துக்கொள்.
வார்த்தைகளை வாழ்ந்து காட்டு.
வாழ்வு தானாகவரும்,
அது முடிவில்லாத வாழ்வாக அமையும்
உன்னைச்சுற்றி கல்லறைகளைக் கட்டியுள்ளாய்,
உனக்கேற்றபடி வேதத்தை அமைத்துள்ளாய்,
வேதத்துக்கு ஏற்றபடி உன்னை அமைக்கவில்லை
உனக்கேற்றபடி, உனக்காக நீ மாற்றி அமைத்த
வேதம் தான் உன் கல்லறைகள்.
வார்த்தை சொல்லும் வாழ்வை நீ வாழும்பொழுது
உன் கல்லறைகள் நொறுங்கும் - அப்போது
உயிர்ப்பு வாழ்வை
நீ இங்கேயும் அனுபவிக்கலாம்.

★ ஆசிரியர்




**கிறீஸ்து நம் பாவங்களுக்காக இறந்து அடக்கஞ் செய்யப்பட்டார். மறை நூலில் எழுதியுள்ள வாறே மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப் பட்டார்.**

1 கொரி 15:3-4

# மானுட உயிர்ப்பு . . . !

பொன்னெனச் சிவந்த மேனிப்
பொலிவினை உடைய பாலன்
கன்னிமா மரி வயிற்றில்
காதலாய் வந்து தித்தே,
மன்பதை தன்னைச் சூழ்ந்த
மாவிருட் துயரைப் போக்கும்
இன்சுடர் எனத் திகழ்ந்தே,
ஈகையால் உயிர்ப்புத் தந்தார்!

பாவத்தின் சம்ப ளமே
பகன்றனன் மரணம் என்றே
சாபத்தை வாங்கி, மாந்தர்
சரிந்தனர் பாவச் சேற்றில்,
ஆபத்தை உணர்ந் திடாது
அழிவுறும் மானு டத்தின்
சோகத்தைக் கழுவ இயேசு
சொரிந்தனன் குருதி மண்ணில்.

முள்முடி, சாட்டை, தோளை
முறித்திடும் பழுச் சிலுவை,
உள்ளெலும் பறுத்துத் தைக்கும்
உருக்கினால் ஆன ஆணி
கள்வரின் நடுவிற் கட்டிக்
காறியும் உமிழ்ந்த போதும்
விள்ளினன் புனித இயேசு
''மன்னியும் பிதாவே இவரை''

ஈட்டியால் விலாவில் குத்தி
இரத்த(ம்) நீர் சொரியக் கண்டார்,
மாட்சிமை மிக்க இயேசு
மரித்தனன் என்றார் தீயர்
மீட்பரோ நாளோர் மூன்றில்
மீண்டுயிர்த் தெழுந்தார் தெய்வக்
காட்சியால் உலகம் முற்றும்
கைதொழு தேத்த லாச்சே...!

''அன்புடன் வாழு! உன்போல்
அயலவன் தன்னை நேசி''
என்றவ ருரைத்த வார்த்தை
ஏற்றுநாம் வாழ்வ தொன்றே,
அன்றவர் தனையே வேள்வித்
தழலிடைச் சொரிந்த பேற்றை
மண்ணகம் மதித்த தாகும்,
மானுடம் உயிர்த்ததாகும்.

நிலாதமிழின்தாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பிற்குத் தோல்வி இல்லை

வாரத்தின் முதல் நாளன்று விடியற் காலையில் இருள் நீங்கு முன்பே அனைவருக்கும் மாபெரும் மகிழ்ச்சியூட்டக்கூடிய நற்செய்தி உதயமானது. ஆம், இயேசு உயிர்த்துவிட்ட நற்செய்திதான் அது. தீயோனுக்கும், மனிதனின் தன்னலத் திட்டங்களுக்கும் அனைத்திற்கும் மேலாக சாவுக்குமிடையே நடந்த போரில் இயேசு பெற்ற வெற்றிதான் இந்த உயிர்ப்பு. திருப்பாடுகளின் ஞாயிறு தொடங்கி எல்லா நிகழ்ச்சிகளையும் தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த இயேசுவுக்கு வெற்றி. பாடுகளிலே பாதை மாறாமல், கொள்கையில் தெளிவோடு சென்ற தன்னிகரில்லாத் தலைவனுக்குக் கிடைத்த வெற்றி வாகைதான் இந்த உயிர்ப்பு. இறையன்பிற்கு தோல்வியில்லை என்பதைத்தான் உயிர்ப்பு பறைசாற்றுகிறது.

மனிதனும் இறைவனும் சேர்ந்து இயேசுவின் வாழ்க்கை வரலாற்றை எழுதுகிறார்கள். பிறப்பிலிருந்து அவரின் பாடுகள் வழியாக இறப்புவரை இருவரும் எல்லா நிகழ்ச்சிகளையும் கருத்து ஒருமிக்க எழுதுகிறார்கள் மனிதன் எழுதினான். அவர் இறந்தபின் அவரின் பூத உடல் கல்லறையில் வைக்கப்படுகிறது. இறைவனும் அதையே எழுதுகிறார். மனிதன் மீண்டும் எழுதுகிறான் அவரை அடக்கஞ் செய்தபின் கல்லறை வாயிலில் பெரிய கல்லைவைத்து மூடி. இயேசுவின் கதைக்கு 'முற்றும்' என்று முற்றுப்புள்ளி வைக்கிறான். ஆனால் இறைவன் எழுதுவதிலோ அவரை அடக்கஞ் செய்தபின் கல்லறை வாயிலில் பெரிய கல்லைவைத்து மூடி முற்றுப்புள்ளி வைக்காமல் அவர் கதையில் இனி தொடரும் என்று எழுதுகிறார். ஆம், மனிதன் சாவோடு எல்லாம் முடிந்துவிட்டது என்று நினைத்துவிட்டான். ஆனால் இயேசு உயிர்த்து சாவை வென்று ஒரு புதுவாழ்வு உண்டு என்று நிரூபிக்கிறார். காலியான கல்லறை இயேசுவின் உயிர்ப்புச்குச் சாட்சி சொல்கிறது.



இயேசுவின் உயிர்ப்பு அனைவரையும் மலைப்புக்குள்ளாக்குகிறது. எம்மாவு வழி சென்ற சீடர்கள் தங்கள் அனுபவத்தை இவ்வாறு பகிர்ந்து கொள்கிறார்கள். ''எங்களைச் சேர்ந்த பெண்கள் சிலர் எங்களை மலைப்புக்குள்ளாக்கினர். விடியற்காலையில் கல்லறைக்குச் சென்றதாகவும், அவர்கள் இயேசுவின் உடலைக் கல்லறையில் காணவில்லை என்றும் வான தூதர்களைக் கல்லறையில் கண்டதாகவும் அந்த வான தூதர்கள் இயேசு உயிரோடு இருக்கிறார் என்று கூறியதாகவும் கூறுகிறார்கள்'' என்றனர்.

அவர்கள் மலைப்புக்குக் காரணம் இல்லாமல் இல்லை. இயேசு வாழ்ந்த காலத்தில் பெண்களின் சாட்சியம் அவ்வளவாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஒரு சிறுவனின் சாட்சியத்துக்குள்ள மதிப்புக்கூட வயதுவந்த ஒரு பெண்ணின் சாட்சியத்துக்கு இல்லை. இப்படிப்பட்ட சமுதாயத்தில் இயேசு உயிர்த்துவிட்டார் என்ற உண்மைச் செய்தியை உலகிற்கு உரைத்தவர்கள்தான் அப்பெண்கள். இச்செய்தி வந்ததால் எல்லாருக்கும் இன்ப அதிர்ச்சி இரட்டிப்பு வேகத்துடன் உயிர்ப்பின் செய்தி பரவுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியில் அவர்கள் சாட்சியம் உண்மையாகிறது. உலகிற்கு உயிர்ப்பு ஒரு வரலாற்று உண்மையாகிறது. அதே உயிர்ப்பு சீடர்களுக்கு ஓர் அனுபவமாகிறது. அதே உயிர்ப்பு அவர்களின் அகக் கண்களைத் திறக்கிறது. அதுவே உயிர்த்த இயேசுவின் மதிப்பீடுகளுக்கு அவர்களையும் பிறரையும் அழைக்கிறது. அதுவே அவர்களின் இறைபணிக்குச் சக்தியாகிறது. இயேசுவின் உயிர்ப்பு அவர்களின் வாழ்க்கையில், அவர்களின் எதிர்நோக்கில், அவர்களின் உலகைப் பற்றிய கருத்துக் கணிப்பில் கண்ணோட்டத்தில் ஒரு பெரும் மாற்றத்தைத் தந்தது. இயேசுவின் பணி வாழ்வு, அவரின் பலி வாழ்வு, அவரின் அன்பு வாழ்வு உயிர்ப்பினால் தெளிவு பெறுகிறது.

இயேசுவின் நற்செய்தி ஒரு தொடர் ஓட்டமாக்கப்பட வேண்டும். மீட்பின் நற்செய்தி உலகின் எட்டுத்திக்கும் பறைசாற்றப் படவேண்டும். அதற்கு அவர்களே (நாம் தான்) அடித்தளமும், ஆரம்ப காலக்கருவிகள் என்ற எண்ணமும் ஆழமாக அவர்களின் உள்ளத்தில் பதிந்தது உயிர்ப்பினால்தான். அனைத்தையுமே ஏன் சாவையுமே வென்றவர் நம் தலைவர். எனவே அவரின் ஆசியோடு பணிகள் தொடரப்படும்போது வேறு எந்த தீய சக்திகளும் நம்மை அழிக்க முடியாது என்ற ஆழமான விசுவாச அனுபவம் பெற்றது இந்த உயிர்ப்பினால்தான்,

இயேசுவின் உயிர்ப்பு நம் வாழ்வில் அனுபவமாக மாறும்போது, அதுவே நம் அன்றாட வாழ்வின் சக்தியாக மாறும்போது அவநம்பிக்கைக்கோ, தோல்விக்கோ, அவமானத்திற்கோ, ஏமாற்றத்திற்கோ இடமில்லை; புனித பவுல் கூறுவதுபோல் எனக்கு உறுதியூட்டும் இறைவனால் எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு, (பிலிப் 4-12) என்ற உணர்வு அனுபவம் பெருகும். இதுவே உயிர்ப்பின் அனுபவம், ஆற்றல். நாமும் அந்த ஆற்றல் அனுபவத்தைப் பெறுவோம். அன்பிற்குத் தோல்வி இல்லை. இதுவே உயிர்ப்புதரும் செய்தி.

அருட்தந்தை C. இருதயராஜ்

## "புலரும் பொழுது" விமர்சன மறுப்புப்பற்றி ஒரு குறிப்பு

கவிஞர் வைரமுத்து கூறியிருப்பதுபோல, சிறிய தூறலானாலும் குடையை விரிக்கவேண்டிய அவசியம் ஏற்படத்தான் செய்கிறது.

ஒரு TEAM வேலையில் அதன் தலைவருக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. ஒரு திரைப்படம் வெற்றிபெற்றால் அதன் நெறியாளரையும், ஒரு கிரிக்கட் அணி வெற்றி பெற்றால் அதன் காப்டனையும் பாராட்டுவதையும் நாம் அறிவோம்.

''புலரும் பொழுது'' ஒலிப்பேழையைப் பொறுத்தவரை மலர்வேந்தனின் இடமும் இத்தகையதே. எனது விமர்சனத்தில் 'மலர்வேந்தன்' செய்தவற்றைப் பற்றி மட்டுமே குறிப்பிட்டுள்ளேன். அவர் செய்யாத எதையும் அவர்மேல் ஏற்றிச் சொல்லவில்லை. எனவே ''ஒருவரைத் தூக்கிவைத்து......'' என்ற குற்றச்சாட்டுக்கு இடமில்லை.

ஆனாலும், ரா. சிக்காந்தியின் பெயர் விட்டுப்போனமைக்கும் இசை இயக்கம் செய்தவர்களின் குரு சங்கீத பூஷணம் ஜீவம் ஜோசப் எனத் தவறாகக் குறிப்பிட்டமைக்கும் வருத்தம் தெரிவிக்கிறேன். கவிஞர் வாசுதேவன் இசை அமைத்த ரமேஷ் போஜியா ஆகியோரின் பெயர்கள் விடுபட்டுப் போனமையும் இவ்வாறானதே.

★ அன்புமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதத்திற்கும் மத நிறுவனங்களுக்கும் அப்பால்தான் ஆன்மீகம் உண்டு

★ கரவையூர்ச் செல்வம்

1970பதுகளில் வானொலி, பத்திரிகை போன்ற துறைகளில் பிரபலமாகப் பேசப்பட்டவர் கரவையூர்ச் செல்வம் அவர்கள். தொடர்புத் துறை, உளவளத்துறை போன்றவற்றில் உயர்கல்வி கற்ற அவர் இன்று அனைத்துலக மட்டத்தில் கவனிப்புப்பெற்ற உளவளத்துறை அறிஞராக விளங்குகிறார். புதிய சிந்தனைகளுக்குச் சொந்தக்காரரான கரவையூர்ச் செல்வம் சிறந்த பேச்சாளர். சமூக உருவாக்கத்தில் மிகுந்த அக்கறை கொண்டவர். யாழ் மண்ணிலிருந்து வெளிவரும் ''ஆத்மா'' பெப்ரவரி 1999 பத்திரிகைக்கு அன்னார் வழங்கிய செவ்வியிலிருந்து சில பகுதிகளை தொண்டன் வாசகர்களுக்குத் தருகிறோம். - இ. ஆ.

★ வழக்கமாக போராட்டங்கள் நடக்கிற சூழலில் இருந்து வித்தியாசமான சிந்தனைகள், இறையியல், மெய்யியல் தளங்களில் புதிய தேடல்கள் தோன்றுவது வழக்கம். இங்கு அவ்வாறு எதுவும் உருவானதாகத் தெரியவில்லையே.

❋ உண்மைதான். ஒரு புதிய இறையியலோ உளவியலோ ஆன்மீகமோ எதுவும் தோன்றவில்லை. ஓர் இந்து தனது சடங்கு ஆசாரங்களுக்கு அமைய ஓர் இந்துவாக வாழ்ந்துகொண்டிருக்கிறார். ஒரு கிறீஸ்தவர், முஸ்லிம்கூட அப்படியே. சாதாரண மத வாழ்வு அப்படியே வாழப்படுகின்றது, அதற்கு மேலே புதிதாக எதுவுமில்லை. சூழ நடக்கிற விடயங்கள் இத்தகைய மத வாழ்க்கையை பாதிக்காமல் பார்த்துக் கொள்வதைத்தான் மத நிறுவனங்கள் தமது கடமையாகக் கருதுகின்றன. அசாதாரணமான சூழலிலும் சாதாரணமாய் வாழ்வதை இவர்கள் ஒரு சாதனையாகக் கருதுகிறார்கள். ஆனால் உண்மையில் அசாதாரண சூழலில் ஒரு புதிய சிந்தனையையும் வாழ்க்கை முறையையும் வேண்டி நிற்கிறது.

★ இவ்வாறான புதிய சிந்தனைகள் எம் மட்டங்களிலிருந்து தோற்றம் பெறலாம் என நீங்கள் கருதுகிறீர்கள்?

❋ ஒரு புதிய சமுதாயம் வருவதாக இருந்தால் அங்கு இருக்கின்ற இளைஞர்கள் தான் அதற்குரிய சிந்தனைகளை கருத்தரிக்கவேண்டும். அவர்கள் குழுவாக இணைந்து செயற்படவேண்டும். சிந்தனைகள் கருத்துக்களை மட்டும் பகிர்ந்து கொள்ளும் குழுவாக அல்லாமல் வாழ்க்கையைப் பகிர்ந்துகொள்ளும் குழுமமாக மாறவேண்டும். அவ்வாறு வாழ்க்கையை பகிர்ந்து கொள்வது கடினம். ஆனால் அதனால் ஏற்படும் உறவு மிகவும் ஆழமானது. பிரச்சினை வேளைகளில் எமது குழு ஆதரவாக இருக்கிறது என்ற எண்ணம் ஒரு சக்தியைத் தருகிறது. இன்று தனிமனிதச் செயற்பாட்டுக்கும் தலைமைத்துவத்துக்கும் இடமில்லை. முற்போக்கான ஒரு தனி மனிதர் தனித்து நிற்கிறபொழுது மிக இலகுவாக விபத்தில் மரணிக்கிறார். அல்லது சிலுவையில் கொலை செய்யப்படுகிறார். ஆனால் குழு பலமானது. இலகுவில் அழியாதது. அழிக்க முடியாதது. அதேவேளை அத்தகைய குழு சுயவிமர்சனம் செய்வதாகவும், கருத்துக்களை உள்வாங்கி சீர்தூக்கிப் பார்க்கத் தயாராகவும் இருக்க வேண்டும். அல்லாது போனால் எல்லாவற்றிலும் தானே சரி என்ற பிழையான மனநிலையை வளர்த்துக்கொள்ளக்கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ இவ்வாறான குழுக்களிலும் கூட காட்டிக்கொடுப்புகளும் உடைவுகளும் ஏற்படுகின்றனவே அதுபற்றி...

✲ ஆம் எத்தகையதொரு நெருக்கமான குழுவிலும் இப்படியான ஓர் ஆபத்து எப்பொழுதும் இருக்கும். அதைத் தவிர்க்கமுடியாது. திடமான ஒரு ஆத்மீகம் இருந்தாலன்றி இத்தகைய சூழலில் உடைந்துபோய் விடுவோம். அந்தவேளை வேதனையிருக்கும், நோவு இருக்கும். ஆனால் ஆழமான ஆத்மீகம் இருந்தால் நாம் அமிழ்ந்துவிடாமல் மீளவும் எழுந்து வருவோம்.

★ நோவுகளைத் தாங்கிக்கொள்ள ஆழமான ஆத்மீகம் பற்றி குறிப்பிட்டீர்கள். அது எல்லோருக்கும் கிட்டுமா? அதைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான கடுமையான முயற்சி எல்லோருக்கும் சாத்தியமா?

✲ நான் நினைக்கிறேன் ஆன்மீகம் மிகவும் எளிமையானது; சாதாரணமானது. ஆனால் எங்களுக்குக் கடினமானதாகக் காட்டப்படுகிறது அல்லது கற்பிக்கப்படுகிறது. ஏதோ ஒரு பெரிய விஷயம் என்று சொல்கிறார்கள். ஆனால் அது அப்படியல்ல. மிகச் சாதாரணமான ஒன்றை மிகச் சிக்கலாக்கித் தருகிறார்கள். ஏன் அவ்வாறு என்று எண்ணுகிறபோது அது பலரை தொடாமல் இருக்கட்டும் என்றுதானோ எனச் சிந்திக்கத் தோன்றுகிறது. அப்படியானால் தான் மதத்தை வளர்க்கலாம். ஆன்மீகத்தை உண்மையாக வளர்த்தால் மக்கள் மதத்தை மத ஒழுங்குகளை நிராகரிக்கும் ஒரு நிலை தோன்றலாம். உண்மையில் சில வேளைகளில் மதம் ஆன்மீகத்துக்குத் தடையாக இருக்கிறது. ஆன்மீகத்துக்காகத் தான் மதம். ஆன்மீகத்தை வளர்த்தபின் மதம் ஒதுங்கிவிட வேண்டும். மதத்துக்கும் மத நிறுவனங்களுக்கும் அப்பால்தான் ஆன்மீகம் உண்டு என்று சொல்வதுதான் சிறப்பானது.

அடிப்படையில் ஆன்மீகம் என்றால் ஓர் உறவு. நான் என்னோடு வைத்திருக்கிற உறவு. உம்மோடு வைத்திருக்கிற உறவு. அதன்மூலம் இறைவனோடு வைத்திருக்கிற உறவு. ஆகவே ஆன்மீகத்தின் ஆரம்பம் சுய அறிவாகும். நான் என்னை எந்த அளவுக்கு அறிந்து கொள்கிறேனோ, நான் இருப்பது போல் அறிந்து கொள்கிறேனோ, எந்த அளவிற்கு என் பலங்கள் பலவீனங்களை தெரிந்து கொள்கிறேனோ அந்த அளவிற்குத்தான் ஆன்மீகம் உண்டு. சுய அறிவின் அடுத்தபடி தன்னையே ஏற்றுக்கொள்வதாகும். எனது பலங்கள் பலவீனங்களை நான் ஏற்றுக்கொள்கிற பொழுது நான் என்னையே ஏற்றுக்கொள்ளுகிறேன். நான் எந்த அளவிற்கு என்னை ஏற்றுக்கொள்கிறேனோ அந்த அளவிற்குத் தான் மற்றவர்களையும் ஏற்றுக்கொள்ள முடியும். அப்பொழுதுதான் இறைவனையும் ஏற்றுக்கொள்ளமுடியும். அல்லாமல் நான் யாரையும் நம்பமாட்டேன். கடவுளைத்தான் நான் நம்புவேன் என்று சொன்னால் அது மதம். ஆன்மீகம் அல்ல. கடவுளை நம்பு, மனிதனை நம்பாதே என்று சொல்பவன் மதத்தை வளர்க்கிறான். ஆனால் ஆன்மீகத்தை வளர்க்கவில்லை.

உண்மையில் நாங்கள் எங்களை அறிய விரும்புவதில்லை. நாங்கள் எங்களைப்பற்றி வைத்திருக்கிற எண்ணங்கள் பொதுவாக வெளியான எண்ணங்கள். எங்கள் சமூகம் என்ன சொல்கிறது, கலாசாரம் என்ன சொல்கிறது, மதங்கள் என்ன சொல்கின்றன, அம்மா அப்பா என்ன சொல்கின்றார்கள் இவற்றை வைத்துத்தான் என்னைப்பற்றி எனது சுய மதிப்பு உருவாகின்றது. ஆனால் நான் யார் என்ற கேள்விக்கு விடை உள்ளரங்கமாகக் கேட்கப்பட்டு என்னைப்பற்றிய சுயமதிப்பு உறுதியானதாக உருவாகியிருந்தால் என்னை எதுவும் அசைக்க முடியாது. இவ்வாறு பெற்றுக்கொள்ளப்படும் சுய அடையாளம் படிப்படியாக வளர்ந்துகொண்டே செல்லும். வளர வளர எனக்குள் பலரை ஏற்றுக்கொள்வதும் சாத்தியம் ஆகும். நான் யார் என்பதைத் தெளிவாக அறிந்து புரிந்து ஏற்றுக்கொள்ளலமா? அதுதான் ஆன்மீகத்தில் கஷ்டமான நிலை. நாங்கள் போட்டிருக்கிற முகமூடிகளை அடையாளங்கண்டு களையத் தொடங்குகிற பொழுதுதான் உண்மையில் ஆன்மீகம் ஆரம்பமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித நாட்டுப் பயணம்

## தொடர் – 32

★ அருள்தந்தை பி. ஜோசப்

### இஸ்ராயேலின் பொருட்காட்சிச்சாலை (Museum)

*1939 - 1945* ஆண்டுகளுக்கிடையில் பல்வேறு நாடுகளிலும் யூதர்களுக்கு எதிராக இடம்பெற்ற பெருங்களப்பலியின் (Holocaust) நினைவாக நிறுவப்பட்ட பொருட்காட்சிச் சாலையைத் தரிசிக்க காலை 9.00 மணிக்குப் புறப்பட்டோம். அது எருசலேமிலேயே நிறுவப்பட்டுள்ளது.

பொருட்காட்சிச் சாலையின் நுழைவாயிலில் முதன் முதல் நாங்கள் எதிர்கொண்டது, இஸ்ராயேலின் மீள் குடியேற்றத்திற்கு உதவி செய்த நாடுகளின் நினைவாக, அந்தந்த நாடுகளிலிருந்து பெறப்பட்ட மரங்கள் நிரம்பியிருந்த மரங்களின் காட்சிதான். நான் முன்னரே குறிப்பிட்டதுபோல் இஸ்ராயேல் மக்கள் வரண்ட பாலை வெளியையும் பசுமை நிறைந்த சோலையாக மாற்றக்கூடிய மன வலிமை பெற்றவர்கள், கடின உழைப்பாளிகள் என்பதை இம்மரங்களின் கண்காட்சி எடுத்தியம்புகின்றது.

பொருட்காட்சிச் சாலையின் உள்ளேயும் முதன் முதல் நாங்கள் கண்டது, ஓரிடத்தில் ஆயிரக்கணக்கான மிதியடிகள், பாதணிகளின் குவியலைத்தான். அதாவது நாசிசவாசியான கிட்லரின் ஆட்சியில் படுகொலை செய்யப்பட்ட 6 கோடி யூதர்களின் நினைவாக, அவர்கள் பயன்படுத்திய மிதியடிகள், பாதணிகளை ஒன்றுசேர்த்து ஓரிடத்தில் குவித்து வைத்துள்ளனர். அதைக் கண்டவுடனே மெய் சிலிர்க்கின்றது. இப்படியும் ஒரு படுகொலையா? ஏன், நம்நாட்டிலும் இதுபோன்ற இனப்படுகொலை, பெருங்களப்பலி நடைபெற்றுக்கொண்டுதானே இருக்கின்றது. நம்மவர்களின் பாதணிகளை எந்தப் பொருட்காட்சிச் சாலையில் குவித்து வைக்கப் போகின்றார்களோ யானறியேன்.

நாடுகடத்தப்பட்டும், பல்வேறு சித்திரவதைகளுக்குட்படுத்தப்பட்டு கொடுமையாக நடாத்தப்பட்டும், சுட்டும், நச்சுவாய்வு நிறைந்த அறைகளுக்குள் அடைக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டும், மருத்துவ ஆராய்ச்சிக்காக உடல்கள் பயன்படுத்தப்பட்டும், மனிதாபிமானமின்றி நடாத்தப்பட்டும் பல்வேறு விதமாக யூதமக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளையெல்லாம் வரிசைப்படுத்தி நிழற்படங்கள், படக்காட்சிகள், தொலைக்காட்சிகள் போன்றவற்றின் மூலம் மக்கள் பார்வைக்கும் சிந்தனைக்கும் வைத்துள்ளனர். அதைவிட மனதை உறுத்தும் காட்சி எதுவெனில், இறந்தபின்பும் அவர்களிடமிருந்த தங்க நகைகளும், பொற்பற்களும் கழற்றப்பட்ட நிலையாகும். அக்கிரமிகளின் இரக்கமற்ற இதயங்களை படம்பிடித்துக்காட்டிநின்றது.

இப் பெருங்களப்பலியின் நினைவாகத்தான் இஸ்ராயேல் அரசு இன்றும், ஆண்டுதோறும் ஆறுகோடி மரங்களை நாட்டும் பணியினை வலியுறுத்தி நடைமுறைப்படுத்தி வருகின்றது.

### பாராளுமன்றக் கட்டிடம் (The Knesset)

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பொருட்காட்சிச் சாலையைச் சந்தித்தபின் இஸ்ராயேல் மக்களின் நாடாளுமன்றத்தை வெளியிலிருந்து இரசித்தோம். கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்ததால் உள்ளே நுழைய அனுமதி கிடைக்கவில்லை. 70 இலட்சம் அமெரிக்க டொலர்களைக் கொண்டு பிரமாண்டமாக அமைக்கப்பட்டதாகவும் 1966ம் ஆண்டு தொடங்கி வைக்கப்பட்டதாகவும் வழிகாட்டி கூறினார். 120 அங்கத்தவர்களைக் கொண்ட நாடாளுமன்றம் நான்கு ஆண்டுகளுக்கு ஒருதடவை இடம்பெறும் பொதுத்தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டு இயங்கி வருகின்றது.

22ம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்ப்பு !

★ செ. குணரெத்தினம்



பொழுது புலர்ந்து முற்றத்தில் இளம்வெயில் பரவியிருந்தது. மல்லிகைச் செடிகளில் வெள்ளைப் பஞ்சுமேகம் மூடிப் பிடித்ததுபோல இலை தெரியாமல் பூக்கள் பூத்துச் சிரித்தன.

இந்த எழில் கோலங்களையெல்லாம் ரசிக்கமுடியாதவளாக கோமளம் முற்றத்தைக் கூட்டிப் பெருக்கிவிட்டு நிமிர்ந்தாள்.

''அம்மா பிச்சைபோடுங்கம்மா !'' என்றபடி ஒரு பிச்சைக்காரன் தெருவாசலில் நின்றான்.

அவனைப்பார்க்க கோமளத்துக்கு எரிச்சலாக வந்தது. வெறிக்கப் பார்த்தபடியே ''இங்க பிச்சையுமில்ல, ஒரு மண்ணாங்கட்டியுமில்ல'' என்று பலமாகச் சத்தம் போட்டாள்.

அவ்வளவுதான் அந்தப் பிச்சைக்காரன் எதுவும் பேசாமல் திரும்பிக்கொண்டான்.

அன்று ஒரு லீவுநாள் பிள்ளைகள் இன்னும் படுக்கையைவிட்டு எழுந்திராமல் அப்படியே சுருண்டு கிடந்தார்கள்.

''விடிஞ்சி ஏழு மணிக்கும் மேலாகப் போகுது என்னடி உங்களுக்கு இன்னும் நித்திர ராத்திரியென்ன கூத்துப்பாக்கப்போனனீங்களா! இப்ப எழுப்பப்போறயளா இல்லாட்டி வாளியில தண்ணியள்ளி கொண்டுவந்து ஊத்தவா!'' என்று கோமளம் படபடத்தாள்.

அந்தளவில் மூத்தவள் மலர் கண்களைக் கசக்கியபடி எழுந்து வந்து, முதல்வேலையாக வானொலியை ஒன் செய்தாள். அவ்வளவுதான் கோமளம் பாய்ந்துசென்று, ''உனக்கு விடிஞ்சதும் முதல் வேல றேடியோவில பாட்டுக் கேக்கிறதான் என்ன!'' என்றபடி வானொலியை நிறுத்திவிட்டு, கிணற்றடிப்பக்கம் போனாள். அப்போது பார்த்து கோமளத்தின் தாய் அங்கே வந்து, ''பிள்ள கோமளம்'' என்றாள்.

''என்ன!'' விறைப்பாகக் கேட்டாள்.

அது அவள் தாய்க்குப் பிடிக்கவில்லை.

''என்னபிள்ள கோமளம் காலையிலேயே அகோரத் தோடநிக்கிறா! ஏன் பிள்ளையளோட என்னவும் பிரச்சனையா?''

''இல்ல!''

'பிறகேன் ஒருமாதிரி யாப்பேசிறா! ஏன் உனக்கிந்தக்குணம்! அன்பாக ஆதரவாகப்பேசி, பண்போடும் பாசத்தோடும் வாழ்ந்த நீ ஏனிப்படி திடீரெண்டு மாறிப்போனா. ஆண்டவர்தான் உன் குணத்தமாத்தவேணும்'

''என்ன எவரும் மாத்தத் தேவல்ல, எனக்கு என்னப் பத்தித்தெரியும்!''

''சரிடியம்மா! பெத்த பிள்ளயெண்டுற பாசத்தில இங்கநான் வந்தது பிழையாப் போச்சு! நான்வாறன்!''

கோமளத்தின்தாய் வந்த வழியே திரும்பினாள்.

''அம்மம்மா! அம்மம்மா'' என்றபடி மலரும், மேரியும் வாசல்வரை பாசத்தோடு ஓடிச்சென்றார்கள்.

மடிக்குள் அவர்களுக்காக வரும்போது வாங்கிவந்த பிஸ்கற் பார்சலை அவர்களிடம் கொடுத்துவிட்டு, இளையவள் மேரியை குனிந்து, கட்டிப் பிடித்து முத்தம் கொடுத்துவிட்டு, ''அம்மம்மா வாறன் கொம்மாவோட என்னெண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் காலம் தள்ளுறயலோ எனக்குத் தெரியாது. நீங்க ளாவது நல்லபடி படிச்சி முன் னுக்கு வரப்பாருங்க; ம்..'' அவள் கவலையோடு நடந் தாள். பிள்ளைகள் இருவரும் பிஸ்கற்றைப் பங்குபோட்டுக் கொண்டார்கள்.

கோமளம் விறாந்தையின் ஓரமாகக் குந்தியிருந்தாள். அடிக்கடி பெருமூச்சுவிடும் அவ ளைப்பார்க்க பிள்ளைகள் இருவருக்கும் நடுக்கம் எடுத் தது. அதனால் மெல்ல எழுந் து தாயின் கண்ணில் படா மல் மறைவாகிக் கொண்டார் கள்.

கோமளம் சிந்தித்துப் பார்த்தாள். அவள் பேசுவது, நடப்பது, செல்வது எல் லாமே பிழையென்று அவ ளுக்குத் தெரிந்தது. ஆனா லும் அவளால் அவற்றைத் தவிர்த்துக்கொள்ள இயல வில்லை. பிச்சைக்காரன், பிள் ளைகள், பெற்றதாய் இவர் களோடெல்லாம் சற்றுநேரத் திற்குமுன் பேசிய பேச்சுக்கள் அநாகரியமானதாகவே அவ ளுக்குப்பட்டது. அதை நினைக்க அவள் விழிகள் அவளையுமறியாமல் கண் ணீர் சிந்தின.

''அம்மா சொன்னது போல ஏன்எனக்கு இப்போது இந்தக்குணம் உண்டானது. அவளுக்கு, அவளுக்குள்ளேயே அதற்கான பதில் இருந்தும் அதை மாற்ற முடியவில் லையே என்ற தவிப்பும் இருக்கவே செய்தது.

கோமளம் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து, வளர்ந் து, படித்து, கிறிஸ்தவனான ஸ்ரீபனை மணம்புரிந்து, நல் லபடிதான் வாழ்ந்தாள். அவள் திருமணம் செய்து முதல் பிள்ளைக்குத் தாயா னதும் தந்தை மாரடைப்பால் மாண்டுபோனார். அவர் ஒரு தமிழ் ஆசிரியராகப் பணியாற் றியவர். உழைக்கும்போது குருவியாகக் கொஞ்சம் கொஞ் சம் சேமித்து கோமளத்துக்கு வீடுவாசல், நகைகள் என்று தேடிக்கொடுத்து நல்லபடியா கவே திருமணத்தையும் செய் துவைத்தார். ஆனாலும் சாகும்வரையும் அவருக் கொரு கவலையிருந்தது. தன் ஒரேயொரு பிள்ளையை தன் போல ஒரு ஆசிரியனுக்காவது கட்டிவைக்க முடியவில்லையே என்பதுதான் அந்தக்கவலை.

ஸ்ரீபன் ஓடாவித் தொழில் புரிபவன். வாட்டசாட்ட மான அழகன், தொழிலிலும் நல்ல ஊக்கமுள்ளவன்.

பாடசாலைக்குப்போகும் போது உண்டான காதல் இரு வரையும் இணைத்து வைத் தது. காதல் நன்றாக முற்றிய பின்புதான் அவருக்குத் தெரி யவந்தது. பெற்றபாசத்தால் துள்ளிய ஆசிரியரை சமாதா னப்படுத்தி ஒருவழிக்குள் கொண்டுவர சமயக்குருவா னவர்களுக்கு போதும் போது மென்றாகிவிட்டது.

ஸ்ரீபன் ஓர் ஓடாவி என் பதுதான் அவருக்கு அரு வருப்பை ஏற்படுத்தியது,

''இயேசுவும் ஒரு தச்ச னின் மகனாகத்தானே இருந் தார், அவரும் அந்தத் தொழி லில் ஈடுபட்டவர்தானே மாஸ் டர்!'' என்ற கடைசி ஆயுத வார்த்தையைப் பிரயோகித்த பின்புதான் அவர் ஓரளவு அமைதிபெற்றார்.

எப்படியோ கோமளமும் ஸ்ரீபனும் குடும்பத்தில் எந் தச் சிக்கலுமில்லாமல் அன் போடு வாழ்ந்தார்கள்.

கோமளத்துக்கு நல்ல பண்பான குணங்கள் இருந் தன. தனக்கில்லா விட்டா லும் பிறருக்குக் கொடுக்கும் ஈகைக்குணம், எவரோடும் எதிர்த்துப்பேசாத கீழ்ப்படிவு எல்லோருடனும் அன்பாகப் பேசுதல் பழகுதல் இப்படி ஒரு அசல் கிறிஸ்தவப் பெண் ணாகவே அவள் வாழ்ந்தாள். அந்தக் கிராமத்தில் கோம ளத்திற்கு நல்ல பெயர் இருந் தது.

''கர்த்தர் உனக்குமுன்னே போகிறவர். அவர் உன்னோ டிருப்பார். அவர் உன்னைக் கைவிடுவதுமில்லை; உன்னை விட்டு விலகுவதுமில்லை, நீ பயப்படவும், கலங்கவும் வேண்டாம்!'' என்று எல் லோரிடமும், எப்போதும் சொல்லிவந்த கோமளமா இப்போது இப்படி, என்று ஊரே முணுமுணுத்தது. ஒவ் வொரு ஞாயிறும் பிள்ளைக ளையும் கூட்டிக்கொண்டு கணவனோடு தேவாலயம் போய்வந்தவள் இப்போது அந்தப்பக்கம் திரும்பிப்பார்ப் பதேயில்லை,

காரணம்...?

ஒருநாள் வழக்கம்போல தொழிலுக்குப்போன ஸ்ரீபன் வீடு திரும்பவில்லை.

தேடியோடினாள்! தவித் தாள்! அழுதாள்! புரண்டாள் அவன் வரவேயில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரோ காக்கிச்சட்டைக் காரர்கள் பிடித்துக்கொண்டு போனதாக அறிந்து அவள் பட்ட பாட்டைப் பார்க்கவே முடியாது.

ஏன் பிடித்தோம், எதற்காகப் பிடித்தோம், எங்கே வைத்திருக்கிறோம். என்ற எந்த விபரத்தையுமே அவளால் அறிந்துகொள்ள முடியவில்லை. அவள் சென்ற இடங்களிலெல்லாம் ''அப்படியான பெயருடைய எவரையும் நாங்கள் பிடிக்கவில்லை'' என்று எல்லோருமே கைகளை விரித்துக் கொண்டார்கள்.

நாட்கள் மாதங்களாகி வருடங்களாகி காலம் ஓடிக் கொண்டேயிருக்கிறது. இன்னும்தான் ஸ்ரீபன் திரும்பவில்லை. இன்று வருவார் நாளை வருவார் என்று நம்பிக்கொண்டிருந்தவளுக்கு 'இனிமேல் வரவேமாட்டார்' என்ற எண்ணம் உறுதியாயிற்று.

இதன் பிறகுதான் கோமளம் புதிய கோமளமானாள் ''கர்த்தர் உன்னைக் கைவிடுவதுமில்லை, உன்னைவிட்டு விலகுவதுமில்லை, நீ பயப்படவும் வேண்டாம், கலங்கவும்வேண்டாம்'' என்ற வார்த்தைகள் வெறும் வார்த்தைகளாகவே அவளுக்கு இப்போது தெரிகிறது. எவரைப் பார்த்தாலும் அவளுக்கு கோபம் வருகிறது. யாரோடும் அன்பாகப் பேச அவளுக்குமனம் வருவதேயில்லை.

# சிறுகதை

காலம் நீண்டுகொண்டே சென்றது. ஒரு பிடிப்பில்லாமல் அவள் வாழ்ந்தாள். சில வேளைகளில் தான் நடந்து கொள்வது பிழையென்றுபடும், சிலவேளைகளில் அதுவே சரியென்றும் தோன்றும்.

உயிர்த்தநாள் நெருங்கிக் கொண்டிருந்தது. கோமளம் பிள்ளைகளெல்லாம் உறங்கிய பின் ஒருநாள் தனிமையிலிருந்து நீண்டநேரமாகச் சிந்தித்தாள். இயேசுவின் பிறப்பு, இறப்பு, உயிர்ப்புப்பற்றிய சிந்தனைகள் முன்னால் வந்து நின்றன.

''மக்களுக்காகவே பிறந்து மக்களுக்காகவே சொல்லொண்ணாத் துயரங்கள்பட்டு, சின்னவயதிலேயே சிலுவையில் அறையப்பட்டவர் இயேசு. மீண்டும் உலகமே அதிசயிக்கத்தக்க வகையில் உயிர்த்தெழுந்தார். அவர், மரணத்தின்மூலமும், உயிர்த்தெழுந்ததன் மூலமும் மக்களுக்கு தந்துபோன அர்த்தங்கள் ஆயிரமாயிரம். இதனைப் புரிந்து கொள்ளாதவர்களில் ஒருத்தியாகத்தானே நானும் இத்தனை நாளும் வாழ்ந்திருக்கிறேன்!'' என்று எண்ணியபோது கோமளத்தின்மேல் கோமளத்துக்கே எரிச்சல் வந்தது. என் கணவரின் இழப்பிற்குப் பின்னால் எனக்குள்ளிருந்து மாண்டுபோன நல்ல பண்புகள் எண்ணங்கள் அன்பு, பாசம் எல்லாமே மீண்டும் இயேசுவைப்போல உயிர்த்தெழாது போனால் நானொரு கிறிஸ்தவப் பெண் என்று சொல்லிக் கொள்வதில் எந்தவித அர்த்தமுமே யில்லை. பிறந்தவர்களெல்லாம் என்றோ ஒரு நாள் இறக்கப்போவது நிட்சயம். என் பிரியமான கணவரைப் போல நானும் பிரியத்தானே போகிறேன். அந்த நாள் வரைக்கும் செத்துப்போன என் நல்ல குணங்கள் உயிர்த்தெழவேண்டும். அதுவே என் கணவராகவும் இருக்கலாம். கோமளம் எழுந்து, லைற்றை 'ஒவ்' செய்துவிட்டு நிம்மதியாகப் படுத்துக்கொண்டாள்.

(யாவும் கற்பனை)

> உரிமைகளை மதித்துக் காப்பது என்பது நீதியின் அடிப்படை. அனைவருடைய உரிமைகளும் மதிக்கப்படும் சமூகமே நீதியான சமூகம்.
>
> 2ம் அருள் சின்னப்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதி என்பது இயலக்கூடியதே
# அது நம் கடமையுமாகும்

**– திருத்தந்தை 2ம் அருள்சின்னப்பர்**

இயேசுக்கிறீஸ்துவின் உயிர்ப்பு விழாவை முன்னிட்டு வத்திக்கான் புனித பேதுரு பேராலயச் சதுக்கத்தில் இடம்பெற்ற ஆராதனையின் போது திருத்தத்தை மேற்கண்டவாறு கூறினார்.

''பல்லாயிரக் கணக்கான மக்கள் மத்தியில் உரையாற்றிய திருத் தந்தை:—

''இயேசு சிலுவைச் சாவின் வழி மனித பாவங்களை அழித்து ஒழித்தார். அவரே நம்மை தந்தையின் அருகில் மீண்டும் அழைத்துச் சென்றார். ஆகவே இந்நாள் இறைவனால் தோற்றுவிக்கப்பட்ட வெற் றியின் நாள். கிறீஸ்துவின் சீடர்களைப்போன்று நாமும் இந் நற்செய் தியை அறிவிக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். ஆனால் உலகின் பெரும் பகுதி மக்கள் துன்பத்திலும் கண்ணீரிலும் மூழ்கி இருக்கும்போது எங்ஙனம் இம் மகிழ்ச்சிச் செய்தியை அறிவிப்பது? மக்கள் அல்லலுறும் போது, அகதிகளாகும்போது அவர்களது இல்லிடங்கள் தீயிட்டுக் கொளுத்தப்படும்போது நாம் இம்மகிழ்வின் செய்தியை எங்ஙனம் எதி ரொலிக்க முடியும்? இவ் இரத்தம் சிந்தல்கள் போதுமே''.

இவ்வாறு தெரிவித்த திருத்தந்தை கோசோவா பகுதியில் வன் முறையாலும், போரினாலும் துன்புறும் மக்களுக்காக சிறப்பான விதத் தில் இறைவனை வேண்டுவதாகத் தெரிவித்தார். நம் கதவுகளைத் தட்டும் கோசோவா சகோதரர்களை நாம் பாராமுகமாய் இருக்க முடி யுமா? என்று வினவிய திருத்தந்தை இம்மக்களுக்குத் தேவையான மனிதாபிமான பணிகளுக்கு வழிதிறந்து விடுங்கள். ஒருமைப்பாட்டுப் பணியை என்றென்றும் தடைசெய்ய முடியாது. இந்நேரத்தில் பல்வேறு துன்பங்களால் பாதிக்கப்பட்டு சமூகப் பிரச்சினைகளை எதிர்நோக்கும் ஆசியாவையும், நீதிக்கும், ஜனநாயகத்துக்கும் துடிக்கும் இலத்தின் அமெரிக்காவையும் நினைவு கூருகிறேன் என்றார்.

'அமைதி என்பது இயலக்கூடியதே, அது நம் கடமையுமாகும். அமைதி என்பது ஒவ்வொருவரின் முதல் தொடக்கமும் வன்முறையை, மரனக் கலாசாரத்தை அழிக்க, மக்களிடையே சகோதர ஒருமைப் பாட்டை வளர்க்க - மதிக்க மூன்றாவது ஆயிரமாம் ஆண்டின் வருகை வரட்டும். ஆண்டவர் தோற்றுவித்த வெற்றியின் நாளுக்காக அக்களித்து அகமகிழ்வோம்.

இவ்வாறு தெரிவித்த திருத்தந்தை உலகமக்கள் அனைவருக்கும் உயிர்ப்பின் வாழ்த்துக்களையும், ஆசியையும் வழங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது உயிர்ப்பு எப்போது?

★ பிரியா


அரசியல் வாதிகளின்
போர் விளையாட்டால்
எங்கள் அமைதி
கல்லறைக்குள்.

கட்சி அரசியல்
சாக்கடை ஆனதால்
சனநாயகம் இங்கே
சவக்குழிக்குள்.

கணவனை இழந்த
மனைவிகளின்
பெற்றோரை இழந்த
பிள்ளைகளின்
அங்கங்கள் இழந்த
அப்பாவிகளின்
அனைத்தையும் இழந்த
அனாதைகளின்
சந்தோஷமெல்லாம்
கல்லறைக்குள்.

நாங்கள் போற்றிய
விழுமியங்கள்
நாகரீகமான
வாழ்க்கை முறைகள்
எங்கள் எதிர்காலக்
கனவுகள் எல்லாம்
இடிந்து வீழ்ந்தன
கல்லறைக்குள்.

அம்மணி ஆட்சியில்
அடைந்தது என்ன?
'செம்மணி' தானே
கிடைத்தது நமக்கு!



'யுத்தம்' என்பது
அரசியல் நெறியானால்
மொத்தமாய்க் கிடைப்பது
புதைகுழி தானே!

இறப்பினில் வாழ்வு
உண்டென்றியம்ப
இயேசு உயிர்த்தார்
என்பது சரிதான்
ஆனால்,
எங்கள் சிந்தனை
உயிர்க்காதவரை
எமது உயிர்ப்பு
என்றுமே இல்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய வசந்தம் இளைய வசந்தம் இளைய வசந்தம்

கதைசொல்லும் விவிலியம்

# இஸ்ராயலின் முதல் அரசன்

★ செல்லத்துரை ஜெயராஜா

இஸ்ராயல் மக்கள் இறைவாக்கினர் சாமுவலிடம் கூடிவந்து, ''மற்ற நாடுகளுக்கு இருப்பதுபோல எங்களுக்கும் ஓர் அரசனை ஏற்படுத்தித்தாரும்'' என்று வற்புறுத்திக் கேட்டனர். சாமுவலுக்கு இந்தக் கோரிக்கை பிடிக்காவிட்டாலும், மக்களுக்காக ஆண்டவரை வேண்டினார். அதற்குப் பதிலளித்த ஆண்டவர், ''இந்த மக்கள், நாம் அவர்களுக்குச் செய்த நன்மைகளை மறந்து, பிற தெய்வங்களை வழிபடுகிறார்கள். அதேபோல இப்போதும் தம்மை ஆள அரசனைக் கேட்கிறார்கள். இதன் வினைவுகளை இவர்கள் அறியமாட்டார்கள். ஆதலால் அவர்களை ஆளப்போகின்ற அரசனின் உரிமைகளை அறிவித்துவிடு'' என்றார். அப்படியே சாமுவல் இஸ்ராயல் மக்களை ஆள அரசனொருவன் வந்தால் ஏற்படப்போகும் கஷ்ட நஷ்டங்களை எடுத்துச் சொல்லியும் மக்கள் பிடிவாதமாக இருந்தனர். எனவே, ஆண்டவர் சாமுவலிடம், ''அவர்களுக்கு ஒரு அரசனை ஏற்படுத்து'' என்றார்.

அது அப்படியிருக்க, பெஞ்சமின் கோத்திரத்தில் சவுல் என்ற பெயருள்ள ஒருவன் இருந்தான். இவன் சிறந்தவன், நல்லவன், மிகவும் அழகு வாய்ந்தவனாகவும் உயரமும் கம்பீரமுமான தோற்றத்தையும் கொண்டிருந்தான். ஒருநாள் வீட்டாரின் கழுதைகள் காணாமற் போய்விட்டதால், அவற்றைத் தேடிக் கண்டுபிடித்துவர வேலைக்காரனின் உதவியோடு சவுல் புறப்பட்டான். எபிராயிம் மலையிலும் சலிசா நாட்டிலும் தேடிக் காணாமையினால் சலிம் நாட்டுக்கு வந்து, ஜெமினி நாட்டிலும் தேடினர். பிறகு சூப் என்ற நாட்டிற்கு வந்தபோது அதிக நாட்கள் கடந்துவிட்டதை உணர்ந்த சவுல் தனது ஊழியனிடம், ''நாம் வீட்டிலிருந்து புறப்பட்டு அதிக நாட்கள் ஆகிவிட்டன .. அப்பா கவலைப்படுவார் .. ஆகையினால் திரும்பிப் போவோம்'' என்று சொன்னான். அதைக் கேட்ட ஊழியன், ''இந்த ஊரில் கடவுளின் மனிதர் ஒருவர் இருப்பதை அறிந்தேன்... ஆனபடியால் நாம் அவரிடம் சென்று விசாரித்தால் ... அவர் நமக்கு வழிகாட்டுவார்'' என்றான் நம்பிக்கையோடு. அதன்படி இருவரும் கடவுளின் மனிதராக அங்கிருந்த சாமுவலைச் சந்திக்கச் சென்றனர்.

அதற்கு முன்னதாக ஆண்டவர் சவுலை சாமுவலுக்கு வெளிப்படுத்தி, ''பெஞ்சமின் நாட்டானாகிய ஒரு மனிதனை உன்னிடம் அனுப்புவோம்; நம் மக்களாகிய இஸ்ராயலுக்குத் தலைவனாக அவனை அபிஷேகம் செய்'' என்று அறிவித்தார். அதன்படி சவுல் சாமுவலிடம் வந்தபோது, அவர்களை வரவேற்று, ''உன் உள்ளத்தில் இருப்பவற்றையெல்லாம் சொல்வேன், மூன்று நாட்களுக்கு முன் நீ இழந்த கழுதைகள் கிடைத்துவிட்டன. ஆகவே, கவலை வேண்டாம். நீ இன்று என்னுடன் சாப்பிட்டுவிட்டு நாளை போகலாம்'' என்றார். அவ்வாறே அவர்களுக்கு விசேட உபசரிப்பும் விருந்தும் நடைபெற்றது. காலையில் இருவரும் புறப்பட ஆயத்தமான போது சாமுவல், நகர எல்லை வரை கூட வந்து, அந்த ஊழியனை முன்னதாக நடக்கச் சொல்லிவிட்டு, சவுலுடன் சற்றுத் தாமதித்து எண்ணைச் சிமிழை எடுத்து, சவுலின் தலையில் ஊற்றி, ''இதோ ஆண்டவர் தமது உரிமையின்பேரில் மன்னனாக உன்னை அபிஷேகம் செய்தார்'' என்று அவனை அபிஷேகம் செய்து, அவன் செல்லப்போகும் வழியில் நிகழப்போகும் சம்பவங்களையும் சொல்லி வைத்தார். (22ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவடுகள்

## புனிதர்களான சிறிலும் மெத்தோடியசும்

★ மெற்றில்டா

இவர்கள் தனித்து அழைக்கப்படாதவர்கள். இரட்டைப் புனிதர்களான இவர்கள் ஒரே தாயிடம் பிறந்த சகோதரர்களாவர். தெசலோனிக்காவின் உயர்குடும்பத்தில் பிறந்தாலும் இவர்களது தாய் அடிமை இனத்தைச் சேர்ந்தவராயிருந்தார். வளர்ந்து வந்த இவர்களில் முதலில் துறவறத்தைத் தேர்ந்தெடுத்தவர் சிறிலே. இவர் கொன்ஸ்தாந்துநோபிள் சென்று அந்நாளைய நடைமுறைக் கொப்ப குருமடம் சேர்ந்து கற்று முடித்து குருவாகத் திருநிலைப்படுத்தவும் பெற்றார். அத்துடன் இயேசுவின் நற்செய்தியைக் காக்கவும் செய்தார். சர்வகலாசாலையில் மெய்யியல் பாடத்தைக் கற்பிப்பவராகவுமிருந்தார். மூத்த சகோதரரான மெத்தோடியஸ் அடிமைக் குடியேற்றமொன்றின் ஆளுனராகக் கடமையாற்றினார். பின்னர் கிறிஸ்நாடு சென்று அங்குள்ள சந்நியாசிகள் மடத்திற்குச் சென்று இணைந்து கொண்டார். பின் அந்த மடத்தின் மடாதிபதியானார்.

862ல் ரட்டிஸ்லேவ் எனும் மொராவியா நாட்டு இளவரசர் சர்க்கரவர்த்தி 3ம் மைக்கலிடம் சென்று இவ்வாறு தனது மக்களிடம் சென்று, அவர்களின் சொந்த மொழியிலேயே கிறிஸ்தவ மறைபரப்புப் பணியைச் செய்யுமாறு அனுப்ப மெதோடியஸின் (இவரது) பெயரைக் குறிப்பிட்டு விண்ணப்பஞ்செய்தார். இவ்விரு சகோதரரும் வெலிகிராட் எனுமிடத்திலுள்ள ரட்டிஸ்லேவ் சபைக்கு அனுப்பப்பட்டனர். அவர்களுக்குப் பல குருக்கள் அங்கு தேவைப்பட்டனர். அவர்களை அபிசேகம் செய்ய ஆயர்களும் தேவையாயினர். எனவே, அங்கிருந்து அவர்கள் புனிதரான பாப்பரசர் கிளெமன்ட்டின் புனிதப் பொருட்களுடன் உரோம் நகர் நோக்கிப் பயணமாயினர். பரிசுத்த பாப்பரசராக இருந்த 2ம் ஏட்ரியன், அவர்களை ஆயர்களாக ஆக்கியதுமல்லாமல், குடியேற்றங்களில் வாழும் அடிமை மக்களுக்குப் போகஞ்செய்யும் அதிகாரத்தையும் வழங்கினர். சிறில் உரோமிலேயே இறந்தார்.

இதற்கிடையில் மெதோடியஸ் மொறவியா, பொகிமியா, போலந்து, அதன் அயல் நாடுகள் வரைக்கும் சென்று, வெற்றிகரமாகத் தன் அப்போஸ்தலிக்கப் பணியை ஆரம்பித்துத் தொடர்ந்தாற்றிவந்தார். அடிமைகளுக்காக ஒரு எழுத்துச்சட்டத்தை உருவாக்கி அவர்களது மொழியிலேயே பரிசுத்த படைப்புகளை அறியும் வண்ணஞ்செய்தார். இவர் மொறாவியாவில் 885ம் வருடத்திலே சித்திரைத்திங்கள் ஆறாம் நாளில் மரித்தார்.

புனிதர்களான சிறில், மெத்தோடியஸ் அடிமைகளுக்கான அப்போஸ்தலர்களாக மதிப்புப் பெறுகின்றனர். மகிமையுடன் என்றும் வாழ்பவரான இறைவன் ஆயர்களும் புனிதர்களுமான இவர்களைக் கொண்டு, அடிமைகளையும் தனக்கென அழைத்த பெருமைக்காக நன்றி கூறி, அவர்களின் வழியில் நாமும் இறைபணிபுரியும் ஊக்கத்தைப் பெற இறையை இறைஞ்சுவோம்.

---

பூமியின் வறட்சியான பகுதிகளிலிருந்து வரும் தண்ணீர் ஏற்கனவே நீர் குறைந்துள்ள கடலை நோக்கித்தான் உருண்டோடும். அதே போல் தான் ஏழை மக்களிடம் உள்ள செல்வமும் ஏற்கனவே செல்வம் நிறையப்பெற்ற நாடுகளிடமும் பணக்காரர்களிடமும் செல்கிறது. - ஜூலியஸ் நிரேரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்புங்கள், நடக்கும்

★ அருள்தந்தை குமார் ராஜா

இருபதாம் நூற்றாண்டின் மிகப்பெரும் தீமை அவநம்பிக்கை. நம்மைச் சுற்றி நடப்பதைப் பார்க்கும்போது நமக்குள்ளும் சுரப்பது நம்பிக்கை ஊற்றுக்களா? அவநம்பிக்கை தானே!

மக்கள் நலனைக் காக்கவேண்டிய தலைவர்களே நாட்டின் சட்டத்தை மீறுவதில், மோசடி புரிவதில், சமாதானம் என்ற பெயரால் போர் நடத்தி அப்பாவிகளைச் சாகடிப்பதில், ஒரே நாட்டின் மக்களை பாகுபாடு காட்டி வஞ்சிப்பதில் வல்லவர்களாயிருக்கிறார்கள்.

மக்கள் உரிமைகளைக் காக்கவேண்டிய காவல் துறையினர் மக்களைத் தவிர இதர அனைத்தையும் - ஊழல், அநீதி புரிபவர்களை பணத்துக்கும், பதவிக்காகவும் பாதுகாக்கின்றனர். வழக்கறிஞர்களும், மருத்துவர்களும் குற்றவாளிகளைப் பாதுகாக்க தங்கள் முழுத்திறமையையும் ஆர்வத்தோடு பயன்படுத்துகிறார்கள். ஆன்மீகத் தலைவர்களோ அரசியலிலிருந்து அறநெறிவரை அனைத்தையும் அசிங்கப்படுத்திவிட்டார்கள். இனி யாரைத்தான் நம்ப? என்னதான் செய்ய?

உண்மை, நன்மை, நீதி, நேர்மை அனைத்துமே புதைக்கப்பட்டுவிட்டன; நல்லன அனைத்தும் மடிந்துவிட்டன என்ற விரக்தியில் முகாரிபாடிவிடவா? ஒப்பாரி பாடிவிட்டு ஓய்ந்துவிடலாமா? வேண்டாம். இதோ உயிர்த்து எழுந்து வருகிறார் இறந்த இயேசு. நன்மையும் உண்மையும் இறந்துவிட்டது போலத் தோன்றினாலும் இறுதி வெற்றி இவைகளுக்கே என்று இறைவன் தரும் உறுதிப்பாடே உயிர்ப்பு விழா. இறைவனை ஏற்றுக்கொள்ளும் அனைவருக்கும் உயிர்ப்பு விழா தருவது உற்சாக நம்பிக்கை. ''சோர்ந்து போகாதீர்கள், நம்பிக்கைக்குச் சாவு இல்லை. உண்மை இறுதியில் வெல்லும். இதை நம்புங்கள்'' என்று நம்மைத் தூண்டி உற்சாகப்படுத்துகிறது இந்த விழா.

## நாம் என்ன செய்யலாம்?

நம் நம்பிக்கையை ஆழப்படுத்திக்கொள்வோம். 'எல்லாம் முடிந்துவிட்டது. இனி ஒன்றும் செய்ய முடியாது' என்று கைவிட்டு விடவேண்டாம். நமது தனி வாழ்விலும் பொது வாழ்விலும், ஆன்மீகத்திலும் அரசியல் ஈடுபாட்டிலும் அவநம்பிக்கை ஆயிரம் கைகொண்டு மறித்தாலும் நம்பிக்கையே நமது சுவாசக் காற்றாக, உயிர் மூச்சாக இருக்கட்டும். வாழ்வில் நம்பிக்கை இல்லாவிட்டால் நாம் இறந்தவர்கள்தான். ஆயிரம் தடை வந்தாலும் அசையா நம்பிக்கையுடன் வாழ்வோம்.

## நம்பிக்கை உள்ள மக்கள் ஒன்றாய்ச் சேர்வோம்

பல துளி பெருவெள்ளமாக மாறி பாறைகளைப் புரட்டிப் போடுவதுபோல் நம்பிக்கையும், நல்லெண்ணமும் கொண்டவர்கள் இணைந்தால் நம்பிக்கையும் வலிமைபெறும். இணைந்த செயல்பாடுகளும் தீமையைத் தகர்த்தெறியும். இது உயிர்ப்பு விழா தரும் இன்னொரு பாடம்.

இயேசுவின் சீடர்களே, தீமையை வெல்ல நம்மால் முடியும், நம்புவோம்.

---


ஆதாம் என்ற சொல் 'Adama' என்ன எபிரேய மூலத்திலிருந்து வந்தது. இதற்கு 'பயனுள்ள நிலத்து மண்ணிலிருந்து வந்த' என்பது பொருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி

திருமூலன்



# கிறீஸ்தவ இலக்கியம்

கிறீஸ்தவத் தமிழ் இலக்கியத்துக்கு ஒரு நோக்கம் உண்டு. அதனை அறிஞர் தனிநாயக அடிகளார் இரண்டே அடிகளில் அழகாகக் கூறுகிறார்.

''என்னை நன்றாய் இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாய்த் தமிழ் செய்யுமாறே''

அன்டிரிக், தத்துவபோதகர், வீரமாமுனிவர் போன்றோரைத் தொடர்ந்து கிறீஸ்தவக் கம்பன் எ. ஆ. கிருட்டினப்பிள்ளை, கிறீஸ்தவ மாணிக்கவாசகர் வேதநாயக சாஸ்திரிகள், தமிழின் முதல் நாவல் ஆசிரியரான மயிலாடுதுறை வேதநாயகம்பிள்ளை, மாதவ்யா போன்றோர் தமிழ்த் கிறீஸ்தவ இலக்கியத்தை வளர்த்தவர்கள். இன்றும் பலர் கதை, கவிதை, நாடகம் என்று முத்தமிழிலும் கிறீஸ்தவ இலக்கியத்தை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

மொழியியல், மொழி பெயர்ப்பியல், இலக்கணவியல், அகராதியியல் ஆகியவற்றில் கிறீஸ்தவர் ஆற்றிய பணிகளைத் தொகுத்து சென்னைப் பல்கலைக்கழகம் ''தமிழியல்'' (முனைவர் சூ. இன்னாசி ஜே. பி. விக்டோரியா, 1990) நூலாக வெளியிட்டிருக்கிறது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ள ''கிறிஸ்தவமும் தமிழும்'' (முனைவர் சூ. இன்னாசி, 1990) என்ற நூலிலும் கிறீஸ்தவர்களின் இலக்கியப் பணியைக் காணலாம். ''கிறிஸ்தவ அறிஞர்களின் இலக்கணப் பணி'' (முனைவர் செ. வை. சண்முகம் 1993) என்ற நூலையும் உலகத் தமிழாராய்ச்சி நிலையம் வெளியிட்டுள்ளது.


சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள ''சிறுகதைச் செல்வம்'' (முனைவர் சூ. இன்னாசி, அ. டேனியல், 1993) என்ற நூலிலும், ''புதினப் படைப்புகள்'' (முனைவர் சூ. இன்னாசி, வி. ஆனந்தமூர்த்தி 1990) ''கவிதைச் செல்லம்'' (முனைவர் சூ. இன்னாசி, 1989) ''கிறீஸ்தவ நாடக இலக்கியம்'' (முனைவர் சூ. இன்னாசி, பெ. கோவிந்தசாமி, 1988) ஆகிய நூற்கள் இன்றைய கிறீஸ்தவ எழுத்தாளர்களின் இலக்கியப் பணிகளை எடுத்துரைக்கின்றன.

சி. டி. வேலுப்பிள்ளை எழுதிய ''இலங்கையில் அமெரிக்க மிஷன்'' (வட்டுக்கோட்டை, 1984) சா, ஞானப்பிரகாசம் அடிகள், பா. பாவிலுப்பிள்ளை அடிகள் ஆகியோர் எழுதிய ''யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்கத் திருச்சபை'' (யாழ் கத்தோலிக்க இலக்கிய சங்கம், 1986) பேராசிரியை ஆர். லயனோவ் எழுதிய ''படைப்பிலக்கியப் பணியில் கிறீஸ்தவ எழுத்தாளர்களின் பங்கு'' பேராசிரியர் கா. சிவத்தம்பி எழுதிய ''ஈழத்தில் கத்தோலிக்க இலககியப் பாரம்பரியம்'' பேராசிரியர் அ. சண்முகதாஸ் எழுதிய ''கிறீஸ்தவ தமிழ் இலக்கிய வளர்ச்சி'' யாழ்ப்பாணம் 1986) ஆகிய நூற்கள் தமிழ் ஈழத்தில் கிறீஸ்தவர்கள் ஆற்றிய இலக்கியப் பணிகளை எடுத்துக் காட்டுகின்றன.

- நன்றி. 'தமிழ்க் கிறீஸ்தவ இதழ்கள் ஓர் ஆய்வு'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருச்சபைச் செய்திகள்

## கண்ணீரில் கோசோவா

கோசோவாவில் நடைபெற்று வரும் யுத்தம் அதன் விளைவாக அங்கு ஏற்பட்டு வரும் அழிவுகள் குறித்து தமது கவலையை வெளியிட்டார் திருத்தந்தை. கோசோவோ மக்களின் துன்பங்கள் குறித்து எவரும் பாராமுகமாய் இருத்தல் இயலாது என்றார். அப்பகுதியில் அகதிகளிடையே பணியாற்றிவரும் குருக்களுக்கு, குறிப்பாக அதிக அளவிலான பணிகளில் ஈடுபட்டுள்ள இத்தாலியக் குழுக்களுக்கு தன் நன்றியையும் வெளியிட்டார் திருத்தந்தை.

## போருக்குப்போர் தீர்வல்ல

ஒரு போரை நிறுத்துவதற்கு தேவையானது இன்னுமொருபோர் அல்ல. மாறாக பேச்சுவார்த்தைகளும் பொறுமையுமே என பத்திரிகையாளரிடம் கூறினார் எருசலேமின் பேராயர் மிஸேசாப . கோசோவா மக்கள் தங்கள் உரிமையைப் பாதுகாப்பதற்கு சர்வதேச சமுதாயம் உதவவேண்டியது அவசியம் என்றும் அதற்குக் குண்டு வீச்சு என்பது ஒழுக்க ரீதியான பதில் மொழியாக இருக்க முடியாது என்றார் பேராயர். நாசரேத்தில் இஸ்ராயேலருக்கும் பலஸ்தினியருக்கும் பிரச்சினைகள் அதிகரித்து வருவதை இட்டு கவலையையும் வெளியிட்டார் அவர்.

## புதிய தடைகள்

நேபாளத்தில் புனித வாரக் கொண்டாட்டங்களை யொட்டி கிறிஸ்தவர்கள் நடத்த விரும்பிய செப ஊர்வலமொன்றை தடை செய்துள்ளது அந்நாட்டுக் காவல் துறை. 'கிறிஸ்தவ மதத்தை மற்றவர்கள் மீது திணிக்க முயல்கிறோம்' என்ற குற்றச்சாட்டை முன்வைத்து இவ்வூர்வலத்துக்குக் காவல்துறை தடை விதித்துள்ளதாகக் கூறினார் கிறிஸ்தவ நடவடிக்கையாளர் மிஸ்ரன் குப்தா. எண்பது வீதத்தினர் இந்துக்களாக உள்ள நேபாளத்தில் மதத்தைப் பின்பற்ற சுதந்திரம் இருக்கின்ற போதிலும் இப்போது கிறிஸ்தவ மதக் கொண்டாட்டங்கள் மறைமுகமாகத் தடைசெய்யப்பட்டு வருகிறது.

## கியூபாவில் உயிர்ப்பு விழா

கம்யூனிச ஆட்சியிலிருக்கும் கியூபாவில் இம்முறை உயிர்ப்பு விழாக் கொண்டாட்டத்தின்போது பக்தி ஊர்வலங்கள், வெளிப்படையான திருமுழுக்குகள் போன்றவை அனுமதிக்கப்பட்டன. 1959ம் ஆண்டு பிடல்காஸ்ட்ரோ ஆட்சியைக் கைப்பற்றியபின் வெளிப்படையாக நடத்த தடை செய்யப்பட்ட மதக் கொண்டாட்டங்கள் கடந்த ஆண்டுதான் முதன் முறையாக, அதுவும் திருத்தந்தையின் அந்நாட்டுக்கான திருப்பயணத்தின் பின் அனுமதிக்கப்பட்டன. குருத்து ஞாயிறையும், புனித வெள்ளியையும் வெளியரங்கமான திருச்சடங்குகளின் மூலம் கொண்டாடிய தலத்திருச்சபை உயிர்ப்பு நாளன்று பல குழந்தைகளுக்கு திருமுழுக்கையும் வழங்கியது. இக் கம்யூனிச நாட்டில் ஹவானாவில் மட்டும் பேராயரால் 17 குழந்தைகளுக்கு திருமுழுக்கு வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மௌனம் காக்க முடியாது

பப்புவாநியூகினி நாட்டில் மக்கள் புரட்சியொன்றும், இரத்தம் சிந்தல்களும் இடம்பெறாமல் இருப்பதற்கு அந்நாட்டுப் பிரதமர் பதவி விலகுவதே ஒரே வழி என தலத் திருச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. மக்கள் துன்புறும்போது திருச்சபை மௌனம் காக்க முடியாது. இன்றைய தேவை அரசு மாற்றமே என பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் கூறினார், அந்நாட்டுப் பேராயர் ஒருவர். "அமைதி காக்கும் மக்கள் இதே பொறுமையுடன் என்றும் இருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது என்ற பேராயர் மக்கள் கொதித்தெழத் தொடங்கிவிட்டால் இரத்தம் சிந்தல்கள் தவிர்க்க முடியாததாகிவிடும் என்றும் கூறினார். ஊழல்களைக் களைவதாகக் கூறி ஆட்சுக்கு வந்த பிரதமர் வாக்குறுதியை நிறைவேற்றத் தவறியுள்ளதாகவும், நாட்டில் வேலைவாய்ப்பின்மை, பணவீக்கம், குற்றம், ஒழுக்கமின்மை போன்றவை அதிகரிக்கக் காரணமாய் இருந்துள்ளதாகவும் கூறினார்.

## திருமணச் சட்டத்தைத் திருத்து!

பாகிஸ்தானில் கிறிஸ்தவ திருமணச் சட்டம் திருத்தியமைக்கப்பட வேண்டுமென அந்நாட்டுக் கிறிஸ்தவ திருச்சபைக் குழுவொன்று கேட்டுள்ளது. கத்தோலிக்க திருச்சபை உட்பட 15 திருச்சபைகள் இணைந்து அரசுக்கு விடுத்துள்ள அறிக்கையில் 'திருமணம் என்பது சமூக உடன்படிக்கை மட்டுமல்ல கடவுளால் உருவாக்கப்பட்டது' என்னும் கூற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளது. 1994ம் ஆண்டு உருவாக்கப்பட்ட 'அனைத்துக் கிறிஸ்தவ சபைகளின் கூட்டமைப்பு' என்னும் பாகிஸ்தானின் கிறிஸ்தவ சபைகளின் அமைப்பு 1972ம் ஆண்டு உருவான பாகிஸ்தானின் திருமணச் சட்டம் குறித்து கிறிஸ்தவ சபைத் தலைவர்களுடன் விவாதிக்க அரசு முன்வர வேண்டுமெனவும் தெரிவிக்கின்றது.

## மரண தண்டனை வேண்டாம்

அமெரிக்க ஐக்கிய நாட்டில் மரண தண்டனைச் சட்டம் நீக்கப்பட வேண்டுமென அந்நாட்டின் கத்தோலிக்க அவை விண்ணப்பம் ஒன்றை விடுத்துள்ளது. கடந்த 25 வருடங்களுக்கு மேலாக அமெரிக்க கத்தோலிக்க அவை மரண தண்டனைக்கு எதிராகப் போராடி வருகின்ற போதிலும் அந்நாட்டில் மரண தண்டனைகள் அதிகரித்தே வருகின்றன எனக்கூறும் இவ் அவையின் கடிதம் கிறிஸ்தவர்கள் ஒன்றிணைந்து மரண தண்டனைகளுக்கு எதிராக உழைக்க வேண்டுமெனவும் விண்ணப்பித்துள்ளது.

## வியட்னாமில் விவிலியம் புதிய மொழிபெயர்ப்பு

வியட்னாமில் குருக்கள், துறவிகள் அடங்கிய குழுவினர் 28 வருட கடின உழைப்பில் வியட்நாம் மொழியிலான புதிய விவிலிய மொழி பெயர்ப்பினை நிறைவு செய்துள்ளனர்.

சாதாரண கிறிஸ்தவர்களும் வாசித்து விளங்கிக் கொள்ளக் கூடிய முறையில் எளிய மொழி நடையில் எழுதப்பட்ட இம்மொழி பெயர்ப்பு விவிலிய மூலப்பிரதிக்கு மிக நெருக்கமாகவும் உள்ளது என்று கூறப்படுகிறது.

1917ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இம்மொழி பெயர்ப்புப் பணியில் முதலில் சங்கீதங்களையும் பின் புதிய ஏற்பாட்டு நூல்களையும் இறுதியாக பழைய ஏற்பாட்டு நூல்களையும் மொழிபெயர்த்து முடித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசுவிடம் சில கேள்விகள்

இயேசுவே,

உமது சீடர்களுக்கு இது ஓர் அதிர்ச்சி தான்.

தோமாஸ் இல்லாத சமயம் மற்றய சீடர்களுக்கு நீர் காட்சி தந்ததை சீடர்கள் தோமாசுக்கு தெரியப்படுத்தியும் அவர் இதனை நம்பவில்லை. யேசுவின் காயங்களை தொட்டுப் பார்த்தால் தான் நம்புவேன் என்றார். சீடர்கள் தோமசை நம்பசெய்வதற்கு பெரும் முயற்சி செய்தனர். ஆனாலும் தோமஸ் தனது கருத்தில் பிடிவாதமாக இருந்தார்.

ஆனால், நீர் புரிந்துணர்வுடனும், பொறுமையுடனும், அன்புடனும் அவருடைய பிடிவாதமான வேண்டுகோளுக்கு சரணடையும் வகையில் மீண்டும் காட்சிகொடுத்து, உமது காயங்களை தொட்டுப் பார்க்கும்படி கூறியது என்னை ஆச்சரியப்பட வைக்கிறது.

இச் செய்கையினால் தோமஸ் உம்மால் முழுமையாக வெற்றி கொள்ளப்பட்டதுடன் உம்மீது ஆழ்ந்த விசுவாசமும் கொண்டார்.

ஆண்டவரே, தோமசைப்போல் நானும் எனது உணர்ச்சிகளுக்கு அடிமையாக உள்ளேன். நடைமுறையில் எனது சொல், செயல் சிந்தனை, நம்பிக்கை, தீர்மானம் யாவும் எனது உணர்ச்சிகளினால் ஆளப்படுகிறது. மற்றவர்களுக்கு சமமாக அல்லது மற்றவர்களுக்கு மேலானவராக இருக்க வேண்டும் என்பதற்காக பல்லாயிரம் வழிகளில் மற்றவர்களுடன் போட்டியிடுகின்றேன். அவர்களைப்பற்றி மட்டுமல்ல அவர்களது சொல், செயல் என்பவற்றைப்பற்றியும் மிகத் தவறாக நினைக்கிறேன்.

அவர்கள் சொல்வதிலுள்ள உண்மைகளை கேட்பதைவிட அவர்களின் செயல்களிலுள்ள நன்மைகளை பார்ப்பதைவிட அவர்களில் குற்றம் காண்பதிலேயே ஆவலாக இருக்கின்றேன். என் வாழ்வில் நான் ஒருபோதும் சமாதானமாய் இருந்ததில்லை. என் பழைய வாழ்க்கையைப் பார்க்கும்போது நான் தவறவிட்ட சந்தர்ப்பங்கள், மற்றவர்களை துன்பப்படுத்திய நேரங்கள் என்பவற்றை எண்ணி மனம் வருந்துகின்றேன்.

காயங்களால் வடுக்களால் நிறைந்த என் வாழ்க்கை குணமாக வேண்டும். எனக்கு எப்போது உண்மையான மன்னிப்பு கிடைக்கும் என ஆவலாய் உள்ளேன்.

ஆண்டவரே, எப்போது நான் என்னைப் பற்றி பூரணமாக அறிவேன்? எப்போது நான் உண்மையான அமைதியை அடைவேன்? எனது பாவ வாழ்க்கையிலிருந்து எது என்னை விடுதலை செய்யும்?

## நிலத்தைத் தரமாட்டோம்

ஓர் ஆங்கிலேயர் இந்திய ஆதிவாசி ஒருவரின் நிலத்தை விலைக்குக் கேட்டார். அதற்கு இந்திய ஆதிவாசி கூறினார், "எங்களுடைய நிலம் உன் பணத்தைவிட பன்மடங்கு மதிப்புடையது. வானத்து சூரியன் பிரகாசிக்கும்வரை, ஆற்று நீர் ஓடும்வரை இந்நிலங்கள் எங்களுக்கும் எங்களோடு உறவு கொண்டிருக்கும் விலங்குகளுக்கும் வாழ்வு கொடுக்கும். இந்நிலத்தை விற்பது எங்கள் வாழ்வை விற்பதற்குச் சமம். மேலும் இந்த நிலங்கள் எங்களுக்குச் சொந்தமானவை அல்ல. மாறாக ஆண்டவனுக்குச் சொந்தமானவை. ஆகவே, இவற்றை விற்கவோ வாங்கவோ எங்களுக்கு உரிமை கிடையாது. உனது பணத்தை நொடிப்பொழுதில் எண்ணிவிடலாம். ஆனால் எங்கள் நிலத்து மண்ணை ஆண்டவன் ஒருவனால் மட்டும்தான் எண்ண முடியும். உனக்குப் பரிசாக எதை வேண்டுமானாலும் தருகிறோம். ஆனால் நிலத்தை மட்டும் என்றுமே தரமாட்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசுவின் பதில்

## மன்னிப்பதனால் நீங்கள் அமைதியை பெறலாம்

நான் உயிர்த்தெழுந்ததை ஏன் தோமஸ் நம்ப மறுத்தார்?

ஏனெனில் அவருடைய பழைய கசப்பான பாவ வாழ்க்கையிலிருந்து புதிய அன்பு வாழ்க்கைக்கு உயிர்த்தெழலாம் என்பதை அவர் நம்ப மறுந்தார். மற்ற சீடர்கள்போல் அவரும் என்னில் நம்பிக்கை வைத்திருந்தார். ஆனால் நான் கொடுமையான மரணத்துக் குட்பட்டபோது அவரின் நம்பிக்கைகளும் நொறுங்கிவிட்டன.

இது அவர்களின் அறிவுக்கு மிகவும் பயங்கரமான கொடுமையாக இருந்ததால் மற்ற சீடர்கள்போல் தோமசும் என்னை கைவிட்டார். என்னை நம்ப மறுத்தது மட்டுமல்ல அவர் தன்னையும் நம்பவில்லை என்பதும் தெளிவாகியது.

இருந்தும் எனது சீடர்களை நான் சந்தித்தபோது என்ன செய்தேன்? எனது அன்பை நிரூபிக்க எனது காயங்களை அவர்களுக்குக் காட்டினேன். ''சமாதானம் உங்களோடு'' என வாழ்த்தினேன்.

''எல்லாம் நன்று''. ''நான் உங்களை மன்னிக்கிறேன்'' என்று இதன்மூலம் அவர்களுக்கு விளக்கினேன்,

மன்னிப்பு என்பது 'எனக்கு எதிராக செய்தவைகளை நான் மனதில் வைப்பதில்லை' என்பதை மட்டும் கருதாது 'நான் உங்களில் நம்பிக்கை வைத்துள்ளேன். உங்களை நம்புகின்றேன்' என்பதுமாகும்.

ஆகவே எனது தந்தை என்னை நம்பி ஒப்படைத்த அதே பணியை எனது சீடர்களை நம்பி அவர்களிடம் ஒப்படைத்தேன். எனது ஆவியை அவர்களுக்கு அளித்ததன் மூலம் இப்பணியை ஆற்றுவதற்கான அதிகாரத்தையும் அவர்களுக்கு அளித்தேன்.

இந்த ஆவி என்னில் வாசம் பண்ணி செயற்படுகின்றது. அதே அன்பின் ஆவிதான் நான் சிலுவை சுமக்கத் துணைபுரிந்தது. அத்துடன் எனது எதிரிகளை மன்னிக்கும் சக்தியையும் எனக்களிக்கின்றது. அதே ஆவி உங்களிலும் வாசம் பண்ணுகின்றது.

அதே ஆவி மன்னிப்பளித்தல், சமாதானம் போன்ற எனது பணிகளை உங்களிலும் உங்கள் மூலமும் தொடர்ந்தாற்ற உங்களில் காத்திருக்கின்றது. என்னைப்போல் நீங்களும் கடவுளின் இரக்கத்தின் ஆவியை கொண்டுள்ளீர்கள். எப்போது நீங்கள் சந்தேகமில்லாமல் என்னை விசுவசிக்கின்றீர்களோ அப்போது எனது சமாதானம் உங்களுக்குக் கிடைக்கும்.

உங்களது பழைய கசப்பான பாவ வாழ்க்கையிலிருந்து விடுபடுவீர்கள். அத்துடன் நீங்கள் உங்களது மரணவாழ்வு அனுபவத்திலிருந்து விடுதலை பெறுவீர்கள்.

நான் உங்களை மன்னித்ததுபோல் நீங்களும் மற்றவர்களை மன்னிக்கும் பணியை எப்போது ஆற்றுகின்றீர்களோ அப்போதே நீங்கள் மேற்கண்ட கொடைகளை பெற்றுக் கொள்வீர்கள்.

மொழிமூலம்: ஆங்கிலம்

தமிழில்: எஸ். அருளானந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14ம் பக்கத் தொடர்ச்சி

அப்படியிருக்கும்போது, அம்மோனியர்கள் இஸ்ராயல் மக்களை மிரட்டி, போரிட அழைத்து, அடிமைப்படுத்துவதாகப் பயமுறுத்தியபோது, இஸ்ராயல் மக்கள் அழுதுகொண்டு சவுலிடம் வந்து முறையிட்டனர். அதன் பிறகு, அவரை ஏளனம் செய்தவர்களும் அவரை அரசனாக ஏற்று வாழ்த்தினார்கள். சவுல் இறைவனுக்கு நன்றிப்பலி செலுத்தினார்.

அன்பான பிள்ளைகளே! இந்தக் கதையின் மூலம் இஸ்ராயல் மக்கள் கடவுளை நம்பாமல் அரசனை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டபோது, இறைவன் சவுலை முதல் அரசனாக அவரே தெரிவுசெய்கிறார், அவரே வழிநடத்துகிறார், அவரே வெற்றியளிக்கிறார் என்பதைத் தெரிந்துகொண்டோம். ஆகவே, நம் வாழ்வில் அனைத்தும் கடவுளின் திருவுளப்படியே நடைபெறுகின்றது என்பதை உணர்ந்து, நம் வாழ்வை ஆண்டவரின் சித்தப்படி நடக்க வழிவிட்டு நடப்போமாக.

8ம் பக்கத் தொடர்ச்சி

பாராளுமன்றக் கட்டிடத்தின் நுழைவாயிலில் நிறுவப்பட்டுள்ள 16 அடி உயரமான இஸ்ராயேலின் நினைவுச் சின்னமாகிய, ஏழு கிளைகளையுடைய விளக்குத்தண்டு (Menorah) அனைவரது கவனத்தையும் ஈர்த்தது. அதில் இஸ்ராயேலின் வரலாறு பொறிக்கப்பட்டிருந்தது. இஸ்ராயேல் மக்களின் 4000 ஆண்டு கொடிய வரலாற்றிலும் அழியாத விசுவாச ஒளியின் சின்னமாக அவ்விளக்குத் தண்டு திகழ்கின்றது என்பதை வெளிப்படுத்தி நிற்கின்றது.

- தொடரும்

## தொடர்கதைப் போட்டியில் பரிசு



வீரகேசரி வாரவெளியீடு நடாத்திய வடக்கு கிழக்கு யாகாணத்திற்கான தொடர் கதைப் போட்டியில் மட்டக்களப்பைச் சேர்ந்த பிரபல எழுத்தாளரும் கவிஞருமான செ. குணரெத்தினம் பரிசு பெற்றுள்ளார். போட்டிக்காக இவர் எழுதிய ''கலைந்த மேகங்கள்'' என்னும் கதை இரண்டாவதாகத் தெரிவு செய்யப்பட்டு 2000/- ரூபா பரிசு பெறுகிறது. நாடளாவிய ரீதியில் நடைபெறும் போட்டிகளிலோ அல்லது அனைத்துலகரீதியில் நடைபெறும் போட்டிகளிலோ மட்டக்களப்பிலிருந்து கலந்துகொண்டு பரிசுபெறும் எழுத்தாளராக (பெரும்பாலும்) செ. குணரெத்தினம் அவர்களே விளங்குகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இதுவரை இலக்கியத்துறையில் 74 பரிசுகளைப் பெற்றுள்ள அவருக்கு இது 75வது பரிசாகும். கவிஞருக்கு எமதுபாராட்டுக்கள்.

— மலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலிய பொது அறிவுப் போட்டி - 37

1. மோசே, இறந்த நாடு எது?

.................................................................................................

2. 'துன்புறும் ஊழியர்' பற்றி வர்ணித்த இறைவாக்கினர் யார்?

.................................................................................................

3. ''நான் விரும்பும் நன்மையைச் செய்வதில்லை; விரும்பாத தீமையைச் செய்கிறேன்'' இவ்வசனம் உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில் எத்தனையாம் அதிகாரம், வசனத்தில் காணப்படுகிறது?

.................................................................................................

4. தமிழிதழியல் வரலாற்றில் முதன் முதல் வெளிவந்த அரசியல் பத்திரிகை எது?

.................................................................................................

5. 1999ம் ஆண்டுக்கான ஆஸ்கார் விருதைப்பெற்றுள்ள திரைப்படம் எது?

.................................................................................................

6. அண்மையில் உலகத்தை பலூன்மூலம் சுற்றிச் சாதனைபுரிந்த இருவர் யார். இவர்களுள் ஒருவர் பிரித்தானியாவையும் மற்றவர் சுவிஸ் நாட்டையும் சேர்ந்தவர்.

.................................................................................................

.................................................................................................

பெயர்.....................................................................

முகவரி...................................................................

.................................................................

................................ இங்கே வெட்டவும் ................................

**போட்டி விதிகள்**

போட்டியில் ஆறு வினாக்களுக்கும் சரியான விடைகளை அளிப்போர் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்படும் ஒருவருக்கு ரூபா 100/- பரிசாக வழங்கப்படுவதோடு ஐந்து வினாக்களுக்கு, நான்கு வினாக்களுக்கு மூன்று வினாக்களுக்கு மட்டும் சரியான விடைகளை அளிப்பவர்களில் தெரிவு செய்யப்படும் ஒவ்வொருவருக்கும் முறையே 75/- 50/- 25/- ஆகிய பரிசுத் தொகைகள் வழங்கப்படும்.

போட்டியில் அனைவரும் பங்குபற்றலாம். ஆனால் தொண்டனில் வெளிவரும் கூப்பனில் அனுப்பப்படும் விடைகள் மட்டுமே போட்டிக்குச் சேர்த்துக் கொள்ளப்படும். ஒருவர் எத்தனை கூப்பனை வேண்டுமானாலும் அனுப்பலாம்.

விடைகளை அனுப்ப வேண்டிய இறுதி நாள்: 20-05-99

முகவரி: விவிலிய பொது அறிவுப் போட்டி - 37,

தொண்டன், அ. பெ. எண். 44, மட்டக்களப்பு. 30000.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவிலிய - பொது அறிவுப் போட்டி - 35 முடிவுகள்

**விடைகள்:**

1. சீதோன் நாட்டின் சரெப்தா ஊர்க் கைம்பெண்ணிடம்
2. பேதுரு (இராயப்பர்) 3. திருவெளிபாடு 1:8
4. கோலோன் பரிசோதனை 5. குஜாரத் மாநிலம் 6. 'வயம்பா'

**பரிசு பெறுவோர்:**

முதல் பிரிவில் இம்முறை யாரும் பரிசு பெறவில்லை.

ரூபா 75/- — ஜீன றேனுகா
65/4, இராசா வீதி,
கந்தசாமி கோவில் திருகோணமலை.

ரூபா 50/- — G. B. மேர்சி ஜெயா
18, சங்கபோ மாவத்தை,
பொறுபன வீதி, இரத்மலானை.

ரூபா 25/- — மேரி அக்னஸ்
"பரிபூரணம்',
54, எல்லை வீதி, மட்டக்களப்பு.

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி.

## அறநெறிக்கு மூன்று அளவுகள்

1. ஒடுக்கப்பட்டோரின் அடிப்படை வாழ்வுத் தேவைகள் செல்வமுடையோரின் விருப்பத் தேவைகளைவிட முதலிடம் பெறவேண்டும்.

2. ஒடுக்கப்பட்டோரின் உரிமை வாழ்வும் சுதந்திரமும் ஆற்றலுடையோரின் உரிமைச் சுதந்திரத்தைவிட முதலிடம் பெறவேண்டும்.

3. சமுதாயத்தின் விளிம்பிலுள்ள (ஏழைகள்) மக்கள் பங்கெடுக்கும் உரிமை முதலிடம் பெறவேண்டும்.

- டேவிட் கோல்லன்பாக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது உயிர்ப்பு?

இயேசு உயிர்த்து விட்டார்!
நமது பாவங்கள் அனைத்துக்காகவும் அவர் இறந்து
நம்மை எல்லா அடிமைத்தனங்களிலுமிருந்து மீட்டெடுக்க
சாவை வென்று வெற்றி வீரராக அவர் உயிர்த்துவிட்டார்
மகிழ்ந்து கொண்டாடுவோம்! அல்லேலூயா!
உயிர்த்த யேசு நமக்கு வழங்கியது
விடுதலை, நம்பிக்கை, சமாதானம்.
ஆனால், நமது நாட்டைப் பொறுத்தளவில்
நமது மக்களைப் பொறுத்தளவில்
அவை கனவாக, அர்த்தமிழந்த சொற்களாகவே இருக்கின்றன
அகதி முகாம்கள், காணாமல் போதல்கள்
குண்டு வெடிப்புகள், ஷெல் வீச்சுக்கள்,
பால் வல்லுறவுகள், புதிதுபுதிதாக
வெளிச்சத்துக்குவரும் புதைகுழிகள்
அத்து மீறல்கள் அடாவடித்தனங்கள்!................
அனுபவங்கள், உயிர்ப்பினின்று நம்மை
அந்நியப்படுத்தியே காட்டுகின்றன.
அல்லது, இந்த அனுபவங்கள்தான்
உயிர்ப்பின் கல்லறைகளா?
இயேசுவின் கல்லறை வாழ்வு மூன்று நாட்கள்தான்
நாம் கல்லறையிலே எத்தனை ஆண்டுகள்!
முட்டைக்குள் குஞ்சு முடங்கிக்கிடந்தால் வாழ்வேது?
கருப்பைக்குள் உயிர் அடங்கிக் கிடந்தால் பிறப்பேது?
போரில் நம்பிக்கை கொண்டுள்ள பேரினவாதிகள்
ஜனநாயக வாதிகளாக நடமாடும் நாட்டில்
உயிர்ப்பு யாருக்கும் பரிசுப் பொருளாக கைக்குவராது
உடைபட வேண்டிய கல்லறைகள் பல
ஜனநாயகமும் கூடத்தான்.
இந்நாட்டில் ஜனநாயகம் சிலரைப்
பயங்கரவாதிகளாக்கியுள்ளது
பலரை பயந்தாக் கொள்ளிகளாக்கியுள்ளது.
தேர்தல்கள், கட்சி அரசியல். மனித உரிமைகள்,
சுதந்திரம் அனைத்தும் கேலிப்பொருளாகிவிட்ட
இந்தத் தேசத்துக்கு தேவை, ஒரு மாற்றுச்சிந்தனை;
மனிதத்தை மையப்படுத்திய ஒரு மாற்று அமைப்பு
உயிர்ப்பு நிச்சயம் என்று
உயிர்த்த ஆண்டவர் கூறுகிறார்.

மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka.

# காற்றில் கலந்து வரும்

## இலங்கை வானொலி தேசிய சேவையில்
## தமிழ் கத்தோலிக்க நிகழ்ச்சிகள்
## மே 1999

நாள் : 02
நேரம் : மாலை 7.00 மணி
புதிய உலகம்

நாள் : 04
நேரம் : மாலை 7.45 மணி
சிறுவர் உலகம்

நாள் : 8,9,10,11,12,13,14
நேரம் : காலை 5.50 மணி
கத்தோலிக்க நற்சிந்தனை

நாள் : 16
நேரம் : மாலை 7.00 மணி
புதிய உலகம்

நாள் : 18
நேரம் : மாலை 7.45 மணி
சிறுவர் உலகம்

நாள் : 22,23,24,25,26,27,28
நேரம் : காலை 5.50 மணி
கத்தோலிக்க நற்சிந்தனை.

நாள் : 30
நேரம் : மாலை 7.00 மணி
புதிய உலகம்

நிகழ்ச்சித் தொகுப்பு : மலர்வேந்தன்

தொடர்பு : சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண். 44
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org